நியமிக்கப்பட வேண்டும் என்று இருந்த தொழிலாளர் நலச் சட்டத்தை சென்னை மாநகராட்சி நீங்கலாக, என்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதைப் படிப்படியாக தமிழக நகராட்சிகள், மாநகராட்சிகள் எல்லாவற்றிலுமே அந்தத் திருத்தம் இல்லாமலேயே, இப்போது ஒப்பந்த அடிப்படையில் தருகின்ற நிலைமை இன்றைக்கு வந்திருக்கிறது. ஆகவே, சென்னை மாநகராட்சி நீங்கலாக என்ற அந்தச் சட்டத் திருத்தத்தை மீண்டும், சென்னை மாநகராட்சி உள்பட எங்கெல்லாம் 50 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மேலே நியமிக்கப்படுகிற அவசியம் இருக்கிறதோ, அங்கெல்லாம் அவர்கள் பணி நிரந்தரப்படுத்தப்படும் தொழிலாளர்களாக நியமிக்கப்படவேண்டுமென்கின்ற அந்தத் தொழிலாளர் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவார்களா? துப்புரவுத் தொழிலாளர்களுக்கு, துப்புரவு செய்கிற அவர்களுக்கு மாநகராட்சிகளிலே வசிப்பதற்கு இடம் கிடையாது. அவர்களுக்கு ஒரு குடியிருப்பை வாயற்ற அந்தத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு வழங்குமா என நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

39—

உள் விளையாட்டு அரங்கப் பணி

***67927—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியின்மூலம் உப்பிலிபாளையம் பகுதியிலுள்ள ஜி.வி. குடியிருப்புப் பகுதியில் கட்டப்படுவதாக திட்டமிடப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கப் பணிகளை விரைவில் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின்மூலம் உப்பிலிபாளையம் பகுதியிலுள்ள ஜி.வி. குடியிருப்புப் பகுதியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–45

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் இன்றைக்கு விளையாட்டு வீரர்கள் சாதனை புரிந்து வருகிறார்கள். கோவையிலே ஒருசில தனியார் துறையின் மூலமாகக் கட்டப்பட்ட உள் விளையாட்டு அரங்கம் இருந்தாலும்கூட, அரசு மூலமாகவோ அல்லது மாநகராட்சி மூலமாகவோ ஒரு விளையாட்டு அரங்கம்கூட இல்லை. கோவையில் 19 வயதிற்குட்பட்ட ஷட்டில்காக் வீரர்கள் சர்வதேச ரீதியாக, இன்றைக்கு ஈடுபட்டு வருவதை இந்து பத்திரிகையும், தினமணி பத்திரிகையும் மிகப் பெரிய அளவிலே புகைப்படம் போட்டு, பேட்டி கண்டு விரிவாக எழுதி வருகிறது. இருந்தாலும்கூட, அங்கே ஓர் உள் விளையாட்டு அரங்கம் இன்றுவரை கட்டி முடிக்கப்படவில்லை. கட்டுவதற்கு ஒருவேளை ஜி.வி. residential area-விலே இடம் இல்லாவிட்டாலும்கூட, நம்முடைய சிறைச்சாலையிலே பயன்படுத்தாத இடம் நிறைய இருக்கிறது. அங்கேயாவது அல்லது நான் மிகவும் சிரமப்பட்டு, Registrar-General–னுடைய அனுமதியைப் பெற்று, பாம்புகள் நிறைந்த அந்தப் பழைய நீதிமன்ற வளாகத்தைச் சுத்தம் செய்து வைத்த பின்னாலே, அங்கே நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது; அதிலேயாவது, ஓர் உள் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்கு, அரசு முன்வருமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, கேரள மாநிலத்திலே, ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலேயும், ஓர் உள் விளையாட்டு அரங்கம் இருக்கிறது; ஆனால், தமிழ்நாட்டிலே, அவ்வாறு இல்லை. ஆகையினாலே, இங்கே Volley Ball, Basket Ball, Shuttlecock, Badminton, Table Tennis, Ring Tennis போன்ற விளையாட்டுகளை விளையாடுவதற்கு, ஓர் உள் விளையாட்டு அரங்கம் மிக மிக அவசியம். அதைக் கட்டித் தருவதோடு, அமைந்திருக்கிற விளையாட்டுப் பல்கலைக்கழகத்திலே விளையாட்டு வீரர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று கேட்டு, அரசு என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, கோவையிலே இருக்கிற சர்வதேச ரீதியான விளையாட்டு வீரர்களுக்கும் மரியாதை செய்யுமா என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2005 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட விளையாட்டுக் குழுவின், 5–7–2002–இல் நடைபெற்ற கூட்டத்தில், இளைஞர்களுக்கிடையே விளையாட்டு உணர்வினை ஊக்குவிக்கும் விதத்தில், கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் விளையாட்டு அரங்கங்கள் அமைப்பது குறித்துத் தீர்மானம் நிறைவேற்றியதன் அடிப்படையில், கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால், கோவை மாநகராட்சி ஆணையருக்கு, 11–8–2002–இல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கோவை மாநகராட்சியின்மூலம் ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, கோவை மாநகராட்சியால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், மைய அரசின் திட்டக் குழுவால், 2005–2006 ஆம் நிதியாண்டில், விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும், 1–4–2005 முதல், அந்தந்த மாநில அரசுகளே அந்தத் திட்டங்களை நிறைவேற்றலாம் எனவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தெரிவித்ததன்பேரில், உப்பிலிபாளையம் பகுதியிலுள்ள, ஜி.வி. குடியிருப்புப் பகுதியில், கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடம், மொத்தம் 4.60 ஏக்கரிலே, 1.65 ஏக்கர் பரப்பிலே, ஓர் உள் விளையாட்டு அரங்கத்தைக் கோவை மாநகராட்சியின் பொது நிதியிலேயிருந்து, ரூ.120 இலட்சம் மதிப்பீட்டிலே அமைத்திட, திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான ஆலோசகரை நியமிப்பதற்காக, நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி கோரி, 17–9–2005–லே கோவை மாநகராட்சி ஆணையரால் கடிதம் அனுப்பப்பட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பணியின்மீது, அதற்குண்டான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.வி. residential area–விலே, இதைக் கட்டுவதற்கு, ஜி.வி. residential area, நகரின் மையப் பகுதியிலே இருப்பதாகச் சொல்ல முடியாது. ஒருவேளை, அங்கே அதைக் கட்ட முடியவில்லை என்று சொன்னால், நகரின் மையப் பகுதியான சிறைச்சாலை வளாகத்திலே, அதை விரைவாகக் கட்டி முடிக்க, அரசோ அல்லது மாநகராட்சியோ முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

40—

விளையாட்டுத் திடல்

***66629—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம், இராஜமங்கலம் பகுதியில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம், இராஜமங்கலம் பகுதியில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் பகுதியில், இராஜமங்கலத்தில், வடக்கு ஜெகன்னாத நகர், மூன்றாவது தெருவில், சுமார் 3 கிரவுண்டு மதிப்பிற்குண்டான இடம், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அது, சிறுவர் விளையாட்டுத் திடல் என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பெயர்ப் பலகை மட்டும் வைக்கப்பட்டுள்ளது. அதை, உடனடியாக விளையாட்டுத் திடலாக அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கு உட்பட்ட இடம் என்பதனால், மாநகராட்சி, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு, அந்த இடத்தைத் தந்தால், விளையாட்டு மைதானம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.